RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# நச்சினார்க்கினியரின் வைதிகநெறியும் தொல்காப்பிய உரையாக்கமும்

செ. மணிகண்டன் [அ, *], இரா. இராஜா [அ]

[அ] தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுபெற்றது), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Nachinarkiniyar's Vedic Norm and Tolkappiar Interpretation

S. Manikandan [a, *], R. Raja [a]

[a] Department of Tamil, National College (Autonomouse), (Affiliated by Bharathidasan University), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: manitamilan10291@gmail.com

Received: 29.09.2022
Revised: 09-11-2022
Accepted: 14-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Nachinarkinyar is the most prolific literary scholar known in the Tamil world. She has written not only for literary works such as Sivakachinthamani, Kalitthokai, and Pathuppaattu but also for all three chapters of the Grammar of Tolkappiyam. Many have discussed the mention of Vedic traditions in the special preface of the Tolkappiyam. The Vedic tradition is based on the idea that the Vedas are the source of all things. Nachinarkinyar has reemphasized the mythologizing ideas that she started in the special preface, reiterating them in many parts of the 'Poruladhikaram, a section that includes nine subject matters. In particular, the Veda Vidhi, the twofold view of the four Vedas, the connection of the texts with the Vedic texts by means of textual techniques, the reference of the Vedic texts and the texts born out of them to the learner, the reference of the Brahmins and the Brahmins as superiors, the integration of their traditions with the Tolkappiya texts, and the integration of the four Varnas and their traditions with the Vedic ethics.

**Keywords:** Nachinarkinyar, Tolkappiyam, Vedic Norm, Poruladhikaram

## முன்னுரை

தமிழுலகம் அறிந்த இலக்கியச் செழுமைமிகு புலமையாளர் நச்சினார்க்கினியர். சீவகசிந்தாமணி, கலித்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட இலக்கிய நூல்களுக்கேயன்றி இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் மூவதிகாரங்கட்கும் உரைகண்டவர். வேதநெறி மரபுகளைத் தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளமையைப் பலரும் விவாதித்துள்ளனர். வைதிக மரபு என்பது வேதங்களே அனைத்திற்கும் மூலம் என்பதைக் கருவாகக் கொண்டது. நச்சினார்க்கினியர் சிறப்புப் பாயிரத்தில் தொடங்கிய புராணமயாக்கக் கருத்துக்களை மீண்டும் வலியுறுத்தும் விதமாகப் பொருளதிகாரத்தின் பல இடங்களில் மீள்பதிவாக்கம் செய்துள்ளார். குறிப்பாக வேதவிதி, நான்கு வேதம் குறித்த இருவகை நோக்கு, உரைஉத்திகளைக் கொண்டு நூற்பாக்களை வேதநூல்களோடு தொடர்பாக்கம் செய்வது, வேதநூல்களையும் அவற்றினின்றும் பிறந்த நூல்களையும் கற்பதற்குரியார் இவரெனச் சுட்டுவது, உயர்ந்தோர் என அந்தணரையும் பார்ப்பாரையும் சுட்டி அவர்க்குரிய மரபுகளைத் தொல்காப்பிய நூற்பாக்களோடு ஒருங்கு வைப்பது, நான்கு வருணங்களையும் அவர்கட்குரிய மரபுகளை வேதநெறியோடு இணைப்பது எனத் தொல்காப்பியம் முழுக்க நச்சினார்க்கினியரின் வைதிகச் சிந்தனைகள் விரிந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## ஓரொற்றுமை

பொதுவாக வைதிக நெறிக்கு முரணானவர் இளம்பூரணர் என்கிற கருத்தாக்கம் உள்ளபோதும் பல்வேறு இடங்களில் வைதிகக் கருத்தைக் குறிப்பாக வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது. இளம்பூரணர் குறிப்பால் எடுத்துரைத்த வைதிக கருத்துக்களை நச்சினார்க்கினியர் வெளிப்படையாகவே நான்கு வேதத்தோடு இணைத்துப் பேசுகின்றார். இவ்வேதம் குறித்து இரண்டு வகை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார். சிறப்புப் பாயிரத்தில் மட்டுமல்லாது வேதம் என்னும் சொல்லைப் பொருளதிகாரத்தில் குறிப்பிட்டு வேதம் ஓதுதற்குரியாரையும் (அகத்.33) இளம்பூரணர் சுட்டுகின்றார். அகத்தியரைச் சுட்டிக்காட்டுகின்றார் (சிறப்புப்பாயிரம்). நால்வருணத்தைப் பற்றிப் பல்வேறு இடங்களில் எடுத்துரைக்கின்றார். எண்வகை மணம் குறித்து விவாதிக்கின்றார். இவ்வாறான காரணங்களைக்கொண்டு இளம்பூணரிடத்தில் இருந்தது வைதிக தாக்கமா? நான்கு வேதம் பற்றிய கொள்கையில் அவரது நிலைப்பாடு என்ன? இளம்பூரணரும் இவ்வைதிக மரபுகள் தவிர்க்கப்படாதனவாய் அவர் கால அரசியல் சமயச் சூழல்களுக்குத் தக வந்து புக வேண்டிய கட்டாயமும் இருந்ததா? எனப் பல்வேறு கேள்விகள் எழுகின்றன. எனினும் இவற்றையெல்லாம் சுட்டுவதற்குக் காரணம் இளம்பூரணத்திலிருந்து சிலவற்றை நச்சினார்க்கினியர் பெற்றுக்கொண்டார் என்பதையும் இருவருக்கும் இடையிலான வைதிகம் குறித்தான தொடர்பை புலப்படுத்துவதும் நோக்கமாகும். இக்கருத்துக்களைக் கொண்டு இளம்பூரணர் வைதிக மரபினர் என்ற முடிவிற்கு வருவதல்ல. மாறாக இவ்வைதிகத் தாக்கம் அவரிடம் தவிர்க்க முடியாததாய் இருந்துள்ளது என்பதை எடுத்துரைப்பதற்காம்.

## வரலாறும் - புராணமீள்பதிவாக்கமும்

தென்திசைக்கென்று எவ்வித தனித்தன்மையும் இல்லை. எல்லாம் வடக்கிலிருந்து வந்தவை என்பது வைதிகம்போற்றுவாரின் பொதுக்கருத்து. இதனால்தான் அகத்தியரே தமிழைத் தந்தவர் என்றும், அது வடதிசையிலிருந்து வந்ததென்றும் கூறப்பட்டு வருகின்றது. தெற்கில் காவிரிகூட இல்லை. அதைக்கூட அகத்தியர் கங்கையிடம் சென்று பெற்றதாகக் குறிப்பிடுகிறார். எனவேதான் இன்றளவும் இப்புராணப் புனைவாக்கம் காவிரிக்குத் தென்னாட்டுங் கங்கை எனக் குறிப்பிடக் காரணமாய் அமைந்துவிட்டது. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கெண்டு என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதிலிருந்து தொல்காப்பியர்கூட தென்னாட்டிலிருந்து அகத்தியரால் கொண்டு வரப்பட்டவர் என நிலைநாட்ட முற்படும் அவரது வைதிகத் திறம் மேலோங்குகிறது. வடமொழி இலக்கியப் பயிற்சி மிகுதியுடைய நச்சினார்க்கினியருக்கு மக்களை மட்டும் மையமாகக் கொண்ட வாழ்வியல் கருத்துக்களை எடுத்துரைக்கும் தமிழ் இலக்கியத்தில் புராணக் கருத்துக்கள் இல்லையே என்கிற ஆதங்கம் இருந்திருக்க வேண்டும். அவ்ஆதங்கமே தொல்காப்பியர் சுட்டாத, பனம்பாரனார் சுட்டாத அகத்தியரையும், நூற்பாவிற்குப் புராண மேற்கோள்களையும் காட்டுவதற்கு காரணமாக அமைந்தது. இங்கு நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் இருக்கின்ற கருத்துக்களுக்கு மிகை விளக்கம் அளிக்கிறார். அது ஒரு உரையாசிரியருக்குரிய உரிமை என்றாலும், தம் கருத்தியலை மட்டும் மையமாகக் கொண்டு விளக்கும்போதுதான் அவரது தற்சார்புத் தன்மை வெளிப்படுகிறது எனலாம் (பரமசிவன் மா., தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைகள் வைதிக, அவைதிக மீக்கோட்பாட்டியல் நோக்கு) என்னும் கருத்து அரண்செய்கின்றது. இவ்வாறு ஆதிக்கச் சிந்தனை மனப்பான்மையிலிருந்து வரும் நச்சினார்க்கினியரால் அவர்காலச் சூழலில் தொல்காப்பியத்திலும் புராணம் இல்லாத குறையைப் போக்கினார் என நம்மை நாம் அமைதிபடுத்திவதன்றிப் பிறிதில்லை.

சிறப்புப் பாயிரத்தில் தொடங்கிய இப்புராணமயமாக்கம் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் பல இடங்களில் மீள்பதிவாக்கம் செய்துள்ளார். இது அவரது வைதிகக் கருத்தியல் மரபை விடாது பற்றிக்கொண்ட மனப்பாங்கைக் காட்டுகின்றது. குறிப்பாகச் சிறப்புப் பாயிரத்தில் துவாரபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டு போந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்

கணிருந்து (கணேசையர் சி., (இ.ப.), தொல்காப்பிய எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், ப.11) என்னும் குறிப்பில் இடம்பெற்றுள்ள பதினெண்கோடி வேளிர் குறித்துப் பொருளதிகாரத்தில் மீண்டும் மீள்பதிவு செய்கின்றார். வேந்துவினை யியற்கை வேந்தனி னொரீஇய (தொல். அகத்.32) என்னும் நூற்பாவின் துறைக்குறிப்பில் இது மலையமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன்றொழில் உரித்தென்கின்றது என்னும் குறிப்பு வேளிரும் தென்னாட்டிற்குரியரல்லர் அவர்களும் அகத்தியரால் தென்திசைக்கு அழைத்து வரப்பட்டவரே என்னும் கருத்தைப் மீண்டும் பதிவு செய்கின்றார் (Ganesaiyar, 2010).

## எண்வகை வேதமும் மீள்பதிவாக்கமும்

நான்மறை முற்றிய என்பதற்கு நச்சினார்க்கினியர் நான்குகூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் 'நான்மறை என்றார்'யென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமுந் தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமு மென்பாரு முளர். அது பொருந்தாது இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின் என்னும் கருத்தை முன்வைக்கின்றார் (Ganesaiyar, 2010). இக்கருத்திலிருந்து வேதங்கள் என்பவை இருக்கு முதலியவை அல்ல என்னும் கருத்தைப் பெறமுடிகின்றது. இங்கு எண்வகை வேதமாக நச்சினார்க்கினியர் குறிப்பிட்டவற்றை மீண்டும் அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் (தொல். புறத்.20) என்னும் நூற்பாவுரையில் வேறுவிதமாக முரண்பட்டு உரைக்கின்றார். இருக்கும் எசுரும் சாமமும் இவை தலையாய ஓத்து இவை வேள்வி முதலியனவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தான் ஆராயப்படுதலின் இலக்கியமுமாயின. அதர்வமும் ஆறங்கமுந் தருமநூலும் இடையாய ஓத்து அதர்வம் வேள்வி முதலிய ஒழுக்கங் கூறாது பெரும்பான்மையும் உயிர்கட்கு ஆக்கமேயன்றிக் கேடுஞ் சூழும் மந்திரங்களும் பயிறலின் அவற்றோடு கூறப்படாதாயிற்று (அதாவது தலையாய ஓத்துக்களில் குறிப்பிடப் படாததாயிற்று எனக் குறிப்பிடுவதிலிருந்து இந்நான்கு வேதத்தையும் அவற்றை தலையாய ஓத்து, இடையாய ஓத்து அவற்றிற்கு அடையாளப்படுத்துகின்றார் (Ganesaiyar, 2010). இந்நான்கும் பல்பிணி சிற்றறிவினோர்க்குரியவை என்ற காரணத்தினால்தான் வேள்விச் சடங்குகளோடு தொடர்புபடுத்தி உரைக்கின்றார். எனவே, தைத்திரியம் முதலான நான்கு வேதம் பற்றிய ஏதேனும் ஒரு கருத்து இங்கு வேறூன்றியிருக்க வேண்டும் எனக் கருதத் தோன்றுகின்றது. இது குறித்துத் தனியாராய்ச்சி வேண்டும்.

## வேதமும் - வருணமும்

நால்வருணக் கோட்பாடு தமிழகத்தில் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. அது ஆரிய நால்வருணக் கோட்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதை பல ஆய்வாளர்கள் எடுத்துரைத்துள்ளனர். எனினும் இங்கு நிலவிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வருணக் கோட்பாட்டை பிராமணர், சத்திரியர் (அரசர்), வைசியர் (வணிகர்), சூத்திரர் (வேளாளர்) எனத் திரித்து வழங்கினர். அந்தணர் என்னும் தமிழ்நெறியை மாற்றிக் குறிப்பிட்ட சமூகத்தாரை மட்டும் சுட்டும் பிராமணரை அரசருக்கு முன் வைத்தனர். இதுகுறித்துப் பாலசுந்தரனார் பழந்தமிழ் மக்களின் மொழியையும், சமயக் கோட்பாட்டினையும் அடிப்படையாகக் கொண்டே தம் மொழியையும் சமயத்தையும் படைத்துக்கொண்டனர் என்பது புலனாகும். காரணம், நால்வருணக் கோட்பாடு - வேள்வி - மந்திரம் என்பவை மேலைஆரிய மக்களிடத்தில் முன்னும் இல்லை இன்றும் இல்லை. ஆரியர்கள் தமிழரிடத்திலிருந்து எடுத்துக்கொண்ட கொள்கைகளை உள்ளவாறே மேற்கொள்ளாமல் அவற்றைத் தங்கள் இனநலத்திற்கேற்பத் திரித்துக்கொண்டு தம் வல்லாண்மையான் வற்புறுத்தத் தொடங்கிய சூழலில்தான் சமணக் கோட்பாடும் அவ்விரண்டிலும் காணப்பட்ட சில முரண்பாடு காரணமாக பவுத்தக் கோட்பாடும் தோன்றிப் பரவின என்னும் கருத்துக் குறிப்பிடத்தக்கது (Thamizhannal, 2010).

தமிழ் நிலம் வழங்கிய நால்வருணக் கோட்பாட்டில் இளம்பூரணருக்கும் உடன்பாடு உண்டு என்பதை அகத்திணையியலின் 28, 31, 33 ஆம் நூற்பாவுரைகளும் மரபியலின் 71 முதல் 85 ஆம்

வரையுள்ள நூற்பாவுரைகளானும் அறியமுடிகிறது. இளம்பூரணர் சுட்டிய நால்வருணக் கோட்பாட்டை நச்சினார்க்கினியர் தமிழ்நெறி அடிப்படையில் குறிப்பிட்ட போதிலும் அவர் கொண்டிருந்த விடாப்பிடியான வைதிகக் கருத்துக்களையும் இணைத்தே சொல்லுகின்றார். இளம்பூரணர் உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான (தொல். அகத். 33) என்னும் நூற்பாவுரையில் வேதம் ஓதுதல் நால்வகை வருணத்திலும் முதலில் குறிப்பிடப்படுகின்ற அந்தணர், அரசர், வணிகருக்குரியது என வலியுறுத்துகின்றார். இக்கருத்துத் தாக்கம் வைதிக நெறியயை வற்புறுத்திக் கூறும் நச்சினார்க்கினியரிடத்தில் இல்லாமல் போக வாய்ப்பில்லை. நான்கு வேதம் குறித்த பார்வையில் இளம்பூரணர் வருணபேதத்தைக் கடைப்பிடிப்பவராக இருந்தாலும் நச்சினார்க்கினியரின் வருணபேத கடைப்பிடிப்பு கரடுமுரடானதே. இக்கரடுமுரடான வைதிக கடைப்பிடி தொல்காப்பிய நூற்பாக்களை வேதநெறி சார்ந்து அவரை இயங்க வைத்திருக்கிறது ஒன்றும் புதிதில்லை. இதுவே தொல்காப்பிய நூற்பாக்களோடு எவ்வித இயைபும் இல்லாத வேத வழக்காறுகளைச் சுட்டிச்செல்வதற்கு அவருக்குக் காரணமாய் அமைந்தது எனலாம்.

இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றினும் (தொல். அகத். 11) என்னும் நூற்பாவிற்கு உரையாசிரியன்மார் ஒவ்வொருவரும் தலைவன் தலைவி பிரிவு குறித்தும், இளவேனில், முதுவேனில் குறித்தும் தொடர்பாக்கம் செய்கின்றனர். இருவகை வேனிலையும் எடுத்துக்கொண்ட நச்சினார்க்கினியர் கலத்திற் பிரிவு, காலிற் பிரிவு எனக் கொண்டு இவ்இருவகைப் பிரிவுக்குரியாரையும் அவர்களை வேதநெறியோடும் இயைபுபடுத்திக் லத்திற் பிரிவு அந்தணர் முதலிய செந்தீ வாழ்நர்க்கு ஆகாமையின் வேளாளர்க்கே உரித்தென்றார். வேத வணிகரல்லாதார் கலத்திற் பிரிவு வேதநெறியன்மையின் ஆராய்ச்சியின்று எனக் குறிப்பிடுகின்றார் (Thamizhannal, 2010).

இவ்வாறு வேதநூலை நால்வருணத்தோடு தொடர்புபடுத்திக் காணும் இடங்கள் பொருளதிகாரத்தில் வெகுவாக இடம்பெற்றுள்ளன என்பதற்கு வேதநூலிற் கூறிய ஒள்ளிய பொருள்தேடி (அகத். 28), வணிகர்க்கு வேதநூலுள் இழைத்த பொருண்முடிவானே (அகத். 29), இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் (புறத்.20) என்னும் நூற்பாவுரையும், வேதநூல்தான் அந்தணர், அரசர் வணிகரென்னும் மூவர்க்கும் உரியவாகக் கூறிய கரணம் (கற்.3) எனவரும் பகுதிகளே சான்று (Thamizhannal, 2010)..

## உரை உத்தியும் வேதமும்

நச்சினார்க்கினியர் உயர்ந்தோர்க் குரிய வோத்தி னான (தொல். அகத். 31) என்னும் நூற்பாவை இது நான்கு வருணத்தோர்க்கும் எய்தாதது எய்துவித்தது எனக் குறிப்பிடுகின்றார். இதற்கு அவர் கூறும் உரை வருமாறு: வேதத்தினாற் பிறந்த வடநூல்களுந் தமிழ் நூல்களும் அந்தணர் அரசர் வணிகர்க்கும், உயர்ந்த வேளாளர்க்கும் உரிய என்றவாறு. அவை சமய நூல்களும் ஒன்றற்கொன்று மாறுபாடு கூறுந் தருக்க நூல்களும் தரும நூல்களும் சோதிடமும் வியாகரணம் முதலியனவும் அகத்தியம் முதலாகத் தோன்றிய தமிழ்நூல்களுமாம். வேதந் தோன்றிய பின்னர் அதுகூறிய பொருள்களை இவையும் ஆராய்தலின் 'ஓத்தினான என்று அவற்றிற்குப் பெயர் கூறினார் ஓத்தென்பது வேதத்தையேயாதலின். என்னும் கருத்து சிந்திக்கத்தக்கது (Ganesaiyar, 2010).. வேளாளரை உழுதுண்போர் என்றும் உழுதுவித்து உண்போர் என்றும் பல இடங்களில் குறிப்பிடும் நச்சினார்க்கினியர் உயர்ந்த வேளாளர் என இங்குக் குறிப்பிட்டது உழுதுவித்து உண்போராகிய பெருநிலவுடைமையாளர் ஆவர். இதற்கு மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப (தொல். அகத். 30) என்னும் நூற்பா விளக்கத்தில் உழுதுவித்து உண்போராகிய நிலவுடைமையாளர்களாக மண்டிலமாக்களும், தண்டத்தலைவர், கிழார், வேளிர், அரசர் எனக் குறிப்பிடப்படுவோர், பாண்டிநாட்டுக் காவிதிப்பட்டம் பெற்றவர் எனச் சில சமூக வரலாறுகளை இயைத்துச் சொல்லுவதிலிருந்து அறியமுடிகின்றது.

கூதிர் வேனி லென்றிரு பாசறை (புறத்.21) என்னும் நூற்பாவில இடம்பெற்றுள்ள பெரும்பகை தாங்கும் வேலினானும் என்னும் துறை விளக்கத்தில் மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின், மொழியா ததனையு முட்டின்றி முடித்தல் என்னும் உத்தியைக் கொண்டு நச்சினார்க்கினியர் காத்தற்றொழிலன்றி அழித்தற்றொழில் பூண்ட முக்கட் கடவுட்குச் சூலவேல படையாதலானும்

முருகற்கு வேல் படையாதலானுஞ் சான்றோர் வேட்படையே சிறப்பப் பெரும்பான்மை கூறலானும் எனத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறாத சிவனையும குறிப்பிடுகின்றார் (Ganesaiyar, 2010)..

## சொல்வழி அரசியல்

நச்சினார்க்கினியர் குறிப்பிட்ட சொல் விளக்கத்திலிருந்து ஓர் உரையை ஆக்கிக் கொள்வதைக் காணமுடிகின்றது. இது பொதுவாகப் படைப்பாளர்களிடத்துக் காணப்பெறுகின்ற புலமைசார் அறிவுநிலையே. ஆயினும் தாம் கொண்ட கருத்தியலுக்குப் இவ்உத்தி பயன்படுத்தப்படுகின்றது. நச்சினார்க்கினியர் கரணத்தி னமைந்து முடிந்த காலை (கற்பு.5) என்னும் நூற்பாவில் இடம்பெற்றுள்ள ஐயர் பாங்கினும் என்பதற்கு முனிவர் மாட்டும் எனவும், அமரர்ச்சுட்டியும் என்பதற்குத் தேவர்கள் புதல்வனைப் பாதுகாத்தலைக் கருதியும் எனவும் உரை விளக்கம் கொடுக்கின்றார். அமரர்கண் முடியு மறுவகை யானும் (புறத். 26) என்னும் நூற்பாவுரையில் பிறப்பு வகையானன்றிச் சிறப்புவகையால் தேவர்கண்ணே வந்து முடிவன இவை எனச் சுட்டும் பகுதியில் முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகுமாம். இவை தத்தஞ் சிறப்புவகையான் அமரர்சாதிப் பாலவென்றல் வேதமுடிவு எனக் காணப்பெறும் குறிப்பு தொல்காப்பிய நூற்பாக்களை வேதநெறியோடு நோக்கும் நச்சினார்க்கினியரின் நோக்கினை அறிய முடிகின்றது (Ganesaiyar, 2010).. மேலும், ஆனிரையையும் மழையையும் தேவர்களுக்குரியவையாகக் குறிப்பிடுவதால் இன்றைக்கு ஆதிக்க வர்க்கம் கையிலெடுத்திருக்கும் பசு அரசியலைக் காட்டுகின்றது.

## கபிலைப்பசு

பாடாண் திணைக்குரிய துறைகளுள் ஒன்றாகக் குறிக்கப்பெறும் கபிலை கண்ணிய வேள்வி நிலையும் (புறத். 35) என்பதற்கு நச்சினார்க்கினியர் சோதாவினைக் கொடுக்கக் கருதிய கொடைநிலை கூறலும் என விளக்கி மேலும் அவர், இது வரையா ஈகையன்றி இன்னலுற்றாற் கொடுக்கவென உயர்ந்தோர் கூறு நாட்காலையிலே கொடுப்பதாமாதலின் வேறு கூறினார். கண்ணிய என்றதனாற் கன்னியர் முதலோரைக் கொடுத்தலுங் கொள்க என்னும் குறிப்பு ஆநிரை கொடுப்பதும் அவற்றொடு சேர்த்து கன்னியரைப் பார்ப்பாருக்குக் கொடுப்பதும் வழக்கமாயிருந்ததைக் குறிப்பிடுகின்றார். இக் கபிலைப் பசுவைப் பின்னரும் வேள்விக்கபிலை என்னும் தொடரால் ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும் (கற்பு.36) என்னும் துறைக்குப் பார்ப்பார்க்குரிய கூற்றினுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார் (Ganesaiyar, 2010).

## வேள்விச் சடங்கு - அக்கினிக் கடவுள் - மணமுறை

இராசசூய வேள்வி, துரங்க வேள்வி (புறத்.20) குறித்தெல்லாம் விளக்கும் நச்சினார்க்கினியர் அவ்வேள்விகளோடு அக்னிக் கடவுளையும் குறிப்பிடத் தவறவில்லை. அங்கியங்கடவுள் என அக்கினிக் கடவுளைக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர் கற்பு என்பதற்கு இவளை இன்னவாறு பாதுகாப்பாயெனவும், இவற்கு இன்னவாறே நீ குற்றேவல் செய்தொழுகெனவும் அங்கியங் கடவுள் அறிகரியாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலின் அத்தொழிலைக் கற்பென்றார் என்னும் குறிப்பு வேதவழக்காற்றை வலியுறுத்துவதாகக் காணப்படுகின்றது (Ganesaiyar, 2010).

எண்வகை மணம் குறித்துக் கூறும் நச்சினார்க்கினியர் மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள் (களவு.1) என்பதற்கு வேதம் ஓரிடத்துக் கூறிய மணமெட்டனுள் எனக் குறிப்பிடுகின்றார். வேதத்தின் நான்கு பகுதிகளில் எப்பகுதியில் கூறப்பட்டது நச்சினார்க்கினியர் அறிந்திருக்கவில்லை. எனவேதான் ஒரு ஊகமாக ஓரிடத்துக் கூறிய எனக் குறிப்பிடுகின்றார். எண்வகை மணங்களுள் முதன்மையாக வைக்கப்படுவது வைக்கப்பெறும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் குறித்து இளம்பூரணர் எண்வகை மணத்தினும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அத்திணைப்பாற்படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக் கூறப்பட்டது எனும் கருத்து நச்சினார்க்கினியர் கருத்தோடு இயைபுடையதாக எண்ணத் தோன்றுகின்றது.

பிரமம் முதல் தெய்வம் வரை கூறப்பெற்ற நான்குவகை மணங்களுக்கு நச்சினார்க்கினியர் ஒத்த கோத்திரத்தானாய் பிரமசரியங் காத்த நாற்பத்தெட்டு அகவையனுக்கு பன்னிரண்டு வயது பெண்ணைத் மணம் செய்வது பிரமம், மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம்மகட்கு ஈந்து கொடுப்பது பிரசாபத்தியம், தக்கான் ஒருவற்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து மணம் செய்விப்பது ஆரிடம், பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒத்த ஒருவற்கு அவ்வேள்வித் தீமுன்னர் மணம் செய்து கொடுப்பது தெய்வமணம் எனக் குறிப்பிடுகின்றார்.

நச்சினார்க்கினியர் குறிப்பிடும் இந்நான்குவகை மணம் செய்யும் முறையிலிருந்து சில கருத்துக்களைப் பெற முடிகின்றது.

1. பெண் அனுமதியில்லாமல் வயது வரம்பின்றி மணம் செய்து வைத்தல்
2. ஒத்த கோத்திர முறையை வற்புறுத்தல்
3. ஆநிரையை மையமிட்டு மணம் செய்துவித்தல்
4. ஆநிரையொடு பொன்னை மையமிட்டு மணம் செய்தல்
5. பெருவேள்வி நடத்தி மணம் செய்தல்

என்னும் கருத்துக்களைக்கொண்டு பொருளும் பொருளொடு இன்பமும் பெறுவதே வேதநெறி பேசுவோரின் உண்மைத் தத்துவம் என்பதை அறிய முடிகின்றது. இது காரணமாகவே அவனறி வாற்ற வறியு மாகலின் (கற். 6) என்னும் நூற்பாவுரையில் வேதத்தையுடம் தருமநூலையும் தலைவன் அறிந்த அறிவைத் தலைவி மிக அறியுமாதலின் அந்தணர் முதலிய மூவருந் தத்தமக்குரிய வேள்வி செய்யுங்கால் தம்மனைவியர் பலருள்ளுந் தமக்கு ஒத்தாளை வேள்விக்கண் உரிமைவகையான் ஏனை மகளிரின் உயர்த்தல் செய்யுமிடத்தும் என உரைவரைகின்றார். அந்தணருக்கு நால்வரும் அரசரக்கு மூவரும் வணிகர்க்கு இருவருந் தலைவியராகியவழித் தங்குலத்திற் கொண்டவரே வேள்விக்கு உரியர் ஏனையோர் வேள்விக்கு உரியரல்ல என்னும் குறிப்பைக் கொடுப்பதிலிருந்து வேள்விக்கட்டுப்பாட்டு மணத்தில் இன்றியமையாதது என்னும் கருத்தை விதிக்கிறார் (Ganesaiyar, 2010).

## புராணமும் இலக்கிய எடுத்துக்காட்டலும்

வேதநெறி மரபையும் எண்வகை மணத்தையும் குறிப்பிடும் இடங்களில் தாம் கொண்ட வைதிகக் கருத்தை நிலைநாட்டுவதற்குத் தாமே பல பாடல்களைப் படைத்துக்காட்டுகின்றார். தருமநூல்விதி என்றும், தருமநூற்றுணிபு என்றும் குறிப்பிட்டு உரைநிறைவைச் செய்கின்றார். அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் (புறத்.20) என்னும் நூற்பாவிற்கு வரைந்துள்ள உரையில் வேள்வி, நான்கு வேதம், நிருத்தம், வியாகரணம், போதாயனீயம், பாரத்துவாசம், ஆபத்தம்பம் ஆத்திரேயம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும் எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம் எனப் பலவகை வடமொழி நூல்களைக் குறிப்பிடுகின்றார்.

மேலும் நச்சினார்க்கினியர் உரை முழுமைக்கும் வீடுபேறு, மறுபிறப்பு, இராமன் இலங்கையை வீடணனனுக்குக் கொடுத்த வரலாறு, தேவரிடத்திலிருந்து வரம் பெறுதல், அசுவத்தமாவின் போர்த்தொழில் பற்றிக் குறிப்பிடுதல், இரணியன் வதைபட்டமையைக் குறிப்பிடுதல், அகத்தியரைக் கலசயோனியிற் பிறந்தவர் எனச் சுட்டுதல், பரதன் அர்ச்சுனன் குறித்துச் சுட்டுதல், வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது (கற்பு. 47) என்னும் நூற்பாவில் இடம்பெற்றுள்ள கல்வி என்பதற்கு வேதாந்த முதலிய கல்வி எனச் சுட்டுதல் என நச்சினார்க்கினியர் உரை முழுக்க வைதிக கோட்பாடு விரிந்து கிடக்கின்றது.

## முடிவுரை

நச்சினார்க்கினியரின் வைதீகக் கருத்துக்களைத்தொல்காப்பியத்திற்கு அவர் எழுதியுள்ள உரைகள் வழி அறியமுடிகின்றது. சிறப்புப் பாயிரத்தில் தொடங்கிய நச்சினார்க்கினியரின் புராணமயமாக்கக்

கருத்துக்கள் மீண்டும் பொருளதிகாரத்தில் எதிரொலிக்கின்றன. தென்திசைக்கென்று எந்தவொரு தனிப்பட்ட வரலாறோ, இலக்கியமோ இல்லை என்றும் தமிழும் ஏன் வடமொழியும் கூட வேதத்தினின்றே பிறந்தவை எனத் தம் கருத்தியலை வலியுறுத்துகின்றார். இவ்வலிறுத்தல் நால்வருணக் கோட்பாட்டிலும், நால்வருணத்தாரின் திருமண முறைகளிலும், பெருந்திணையாகச் சுட்டப்பெறும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் முதலியவற்றிலும் தொடர்கின்றது. உரை உத்திகொண்டு தொல்காப்பிய நூற்பாக்களுக்கு வேதநெறிவழி உரையாக்கத்தினை நிகழ்த்துதலைக் காணமுடிகின்றது. சொல்வழி உரையாக்கம் நிகழத்துதலும் அச்சொல்வழி உரையாக்கத்தில் வேதநூற் கருத்துக்களை எடுத்துரைத்தலையும் நச்சினார்க்கினியர் செய்துள்ளார். ஆநிரை, பார்ப்பார், மழை என அவர் உரைவழி பேசும் ஆநிரை அரசியல் கலந்த வைதிக நோக்கம் பரவலாகத் தெரிகின்றது. ஒட்டுமொத்தமாக தொல்காப்பியர் தென்னாட்டினர் அல்லர். தென்னாட்டுக்கென எந்த தனிதன்மையும் இல்லை. எல்லாம் வேதத்தினின்று பிறந்தவை என்னும் கருத்தியலைக் கொண்டு விளைந்தவையே எனக் குறிப்பிடலாம்.

## References


Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License